6.11.2025 Mcop 274/2023 ம.சா 1 திருமலைக்குமார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1,2 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் திருநெல்வேலியில் ஜங்ஷனில் பேபி சர்ஜிக்கில் என்ற பெயரில் மருத்துவ அறுவை சிகிச்சை உபகரணங்கள் விற்கும் தொழில் செய்வதற்கான எந்தவித ஆவணமும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். நான் ரைஸ்மில்லில் வேலை பார்த்தேன். நான் மாதம் ரூ.50 ஆயிரம் சம்பளம் பெற்று வந்தேன் என்பதை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய வயதை காட்டக்கூடிய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வேலை செய்த ரைஸ்மில்லின் பெயர் தெரியுமா என்றால் தாயார்புரத்தில் உள்ள மார்டன் ரைஸ்மில் ஆகும். நான் எந்த ஒரு வேலையும் இதற்கு முன்னர் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய மருத்துவ விடுப்பு ஆவணத்தை தற்போது குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய விபத்து பதிவேட்டில் என்னுடைய ஊர் பெயர் கேசப்பட்டி என உள்ளது என்றும், ஆனால் எனது மனுவில் புண்னைவனம் என சொல்லியுள்ளேன் என்றால் எனது ஊர் புண்ணைவனம் ஆகும். நான் புளியங்குடியில் இருந்து தளவாய்புரம் செல்வதற்காக டி.என்.67.ஏ.என்.8088 என்ற பேரூந்தில் படிகட்டில் நின்று பயணம் செய்தேன் என்றால் சரிதான். படிகட்டில் பயணம் செய்வது மோட்டார் வாகன விதியின்படி தவறு என்றால் சரிதான். பஸ்சில் உள் இருந்த யாருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். எனக்கு காயங்கள் முழுமையாக குணமாகிவிட்டது என்றால் சரிதான். நான் என் மனுவில் என் காயத்தை பற்றி அதிகப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பல்வேறு தலைப்புகளில் இழப்பீடு

அதிகப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து சமயம் 1ம் எதிர்மனுதாருக்கு ஒட்டுனர் உரிமம் இருப்பதாலும், 2ம்எதிர்மனுதாரர் தனது வாகனத்தை 3ம்எதிர்மனுதாரர்நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் எனக்கு 3ம்எதிர்மனுதாரர்மட்டுமே இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. 1,2 எதிர்மனுதாரர்களை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.